தமிழீழத்தின் அழகு தனி அழகு
எங்கள் தாயகத்தின் பெருமை அறியும் உலகு 2

கடல் சூழ்ந்த யாழ்ப்பாணம் படகு போல் இருக்கும்
கரை மணலில் நண்டுகள் ஏதேதோ கிறுக்கும் 2
குடை போலும் பனைமரம் பாற்போரை மயக்கும்
கொள்ளை அழகு என்று உலகமே வியக்கும் 2

தமிழீழத்தின் அழகு தனி அழகு
எங்கள் தாயகத்தின் பெருமை அறியும் உலகு 2

கோணமாம் மலை மீது அலை மோதிப் பாயும்
குட்டமாய் எழில் மான்கள் கடலோரம் மேயும் 2
தேன் நிலா காலத்தில் கடலில் பொன் பூக்கும்
தீந்தமிழ் புலவன் கை எழுதுகோல் தூக்கும் 2

தமிழீழத்தின் அழகு தனி அழகு
எங்கள் தாயகத்தின் பெருமை அறியும் உலகு 2

மட்டுநகர் மண்ணில் மீன் குடப் பாடும்
மணல் மேட்டில் கடல் காற்றில் தென்னை குத்தாடும் 2
பட்டிப்பழை வயல்கள் தங்கமாய் காய்க்கும்
பறண் மீது உழவர் பெண் தமிழ்பாடல் கேட்கும் 2

தமிழீழத்தின் அழகு தனி அழகு
எங்கள் தாயகத்தின் பெருமை அறியும் உலகு 2

விழிகளில் வன்னி நிலம் அழகள்ளி சொரியும்
வேரில்லா செடியை போல் மயில் ஆடித்திரியும் 2
ஏழில் தோய்ந்த மன்னாரில் முத்துக்கள் கிடைக்கும்
ஈழத்தின் திசை நான்கும் ஓவியம் படைக்கும் 2

இசைத்தட்டு : தேனிசைத் தென்றலும் புயலும்
பதிப்பகம் : அகம்